சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 50/2021**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயசேகர் | தொழில் | கூலி வேலை |
| தந்தை பெயர் | சந்திரன் | ஜாதி | |
| கிராமம் | வண்ணாங்குளம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 46 |

**17.11.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 கடனுறுதிசீட்டில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். பி.வா.சா.ஆ.10ல் உள்ள என் சாட்சி கையெழுத்து **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.